53

போதனை விஷய பூங்கொத்து

53

மாதமொருமுறை மலரும்

7 APR 1945

Editor & Publi... A. Lourduswami, B.A., L.T.
...aining School, Trichinopoly.

ஜை211, N11ff
M45·35·8·
210601·

... பெப்ருவரி 1945 மலர் 8

...றை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணு 2.

போதனா விஷயப் பூங்கொத்து

கொத்து 35] 15 பெப்ருவரி 1945 [மலர் 8

பத்திராதிபர் குறிப்புகள்

T. S. L. C. பரீட்சை 1945. அடுத்தமாதம் 13-ம் தேதி செவ்வாய்க்கிழமையன்று தொடங்கி நடைபெறும். பரீட்சை ஸெண்டர் வழக்கம்போல நம் பாடசாலையே. பரீட்சைகால அட்டவணையை மற்றோரிடத்திற் காண்க.

முன் வருஷங்களில் பரீட்சையில் தவறிப்போன நம் பழைய மாணவர்கள் இவ்வருஷம் வேறு ஸெண்டரில் பரீட்சை எழுதுவதாய் இருந்தால், இங்கு நம்மிடம் படித்ததற்கு அத்தாட்சியாக இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் (Identification certificate) பெற்றுக்கொள்ளக்கடவர். அதற்காகவேண்டுவோர் தபால் சார்ஜுக்கு 1½ அணா ஸ்டாம்பு உடனே அனுப்பி அதைப் பெற்றுக்கொள்ளத் தவறவேண்டாம்.

* * *

பழையமாணவர்தினக் கொண்டாட்டம்.—இஃது இந்த பெப்ருவரி மாதம் 28-ம் தேதி வியாழக்கிழமை மாலை 5-30 மணிக்கு நடைபெறும். அவ்வமயம் நம் பழைய மாணவர்களனைவரும் தவறாமல் விஜயம்செய்து, விழாவைச் சிறப்பித்துத் தாயின் அன்புக்கும் அபிமானத்திற்கும் உரிமையாளராவர் என்று நம்புகின்றோம்.

ஷ தேதியில் சங்கீதப் போட்டி.—சென்ற வருஷ பழைய மாணவர் வருடாந்தரக் கூட்டத்தில் ஸ்ரீ G. மரியவிக்டர் என்பவர் இவ்வருஷப் போட்டியில் முதல்தரமாக விளங்குபவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கப் பரிசு அளிப்பதாக வாக்களித்துள்ளார். ஆகவே ஷ தேதியில் நடைபெறும் கொண்டாட்டத்தன்று வாய்ப்பாட்டுப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் பழைய, புது மாணவர்கள் (Open to Old and New boys) தத்தம் பெயரை இம்மாதம் 24-ம் தேதிக்குள் இப்பாடசாலைத் தலைமையாசிரியரிடம் தெரியப்படுத்திவிடவேண்டும். ஆனால் முந்திய வருஷ பாட்டுப்போட்டியில் பரிசுபெற்ற பழைய மாணவர்கள் இவ்வருஷமும் கலந்துகொள்ளக்கூடாது. மற்ற நிபந்தனைகளைத் தலைமை ஆசிரியரிடமிருந்து தெரிந்துகொள்ளவும்.

சென்னை கல்வி இலாகா

Training School Leaving Certificate Examination March 1945

TIME TABLE

DAYS AND HOURS (Indian Standard Time)	SUBJECT
1945	**SECONDARY GRADE**
Tuesday, 13th March—	
10 A. M. to 12 NOON ...	Education I (Principles of Education).
2 P. M. to 4 P. M. ...	Education II (School Administration).
Wednesday, 14th March—	
10 A. M. to 1 P. M. ...	Special Methods (Non-language Subjects)—I (Mathematics and General Science).
2 P. M. to 4-30 P. M. ...	English (Methods and Texts).
Friday, 16th March—	
10 A. M. to 1 P. M. ...	Special Methods (Non-language subjects)—II (History and Civics and Geography).
2 P. M. to 4-30 P. M. ...	A language of the Presidency (Methods and Texts).
1945	**ELEMENTARY GRADE**
Tuesday, 13th March—	
10 A. M. to 12 NOON ...	Child Nature and Education.
2 P. M. to 4 P. M. ...	School Administration.
Wednesday, 14th March—	
10 A. M. to 12-30 P. M....	Methods of Teaching—Language (Texts).
2 P. M. to 4 P. M. ...	Methods of Teaching—Elementary Mathematics.
Friday, 16th March—	
10 A. M. to 12 NOON ...	Methods of Teaching—Nature Study and Gardening.
2 P. M. to 4 P. M. ...	Methods of Teaching—Indian History and Civics.
Saturday, 17th March—	
10 A. M. to 12 NOON ...	Methods of Teaching—Geography.
2 P. M. to 4 P. M. ...	Rural Social Problems.

[Fort St. George Gazette, 6—2—1945.]

VIII வகுப்பு முடிவுப் பரீட்சை, ஏப்ரல், 1945. இப்பரீட்சை கால அட்டவணை பின்வருமாறு:—1945 April 4th Wednesday, 10 A.M. to 12 Noon, Language. 2 P.M. to 4 P.M., History and Geography including Civics.

1945 April 5th Thursday, 10 A.M. to 12 Noon: Elementary Mathematics. 2 P.M. to 4 P.M. English. (Optional subject.)

* * * *
** ** ** **

Text-Book in English 1946.—இதைப்பற்றிய அறிக்கை பின்வருமாறு: இந்த 1945-ம் வருஷத்திய பரீட்சைக்கு ஏற்படுத்தப் பட்டிருக்கிற இதே பாடபுத்தகந்தான் அடுத்த 1946-ம் வருஷத்திய VIII வகுப்பு முடிவுப்பரீட்சைக்கும் (English optional) மீண்டும் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எல்லாப் பாடங்களையும் கற்கவேண்டும். ஒரு பாடங்கூட குறைக்கப்படவில்லை. இதுதான் வித்தியாசம். இப்புத்தகம் அதாவது "Villags Readers" Reader V, Special Edition, for Madras VIII Std. Public Examination, Written by Messrs F. L. Brayne and W. M. Ryburn and Published by the Oxford University Press, Mount Road Madras. காபி ஒன்று 10 அணு வீதம் ஷெ இடத்தில் கிடைக்கும்.

கேள்விகளின் தன்மை

(S. G.)

கேள்விகளைப் பெரும் பிரிவாக விஷய கேள்வியெனவும் சிந்தனை தூண்டும் கேள்வியெனவும் இருவகையாகப் பிரிக்கலாம். இவ்விரண்டிற்கும் தனித்தனி மதிப்பும் விசேஷமும் உள்ளன. சிந்தனையைத் தூண்டும் கேள்விகள் அவ்வளவாக கையாளப்படுவதில்லை. அதனால் தான் புதுமாதிரியான துணுக்குக் கேள்விகள் தோன்றலாயின.

சிந்தனை தூண்டும் கேள்விகளுக்குச் சிறிது முன் தாயரிப்பு தேவை. பாராக்களுக்குத் தலைப்பு இடுதல், பாடத்துக்கு தலைப்பு வேறுசூட்டுதல், பாடத்தின் அமைப்பைக் கவனிக்கச்செய்தல், சம்பவத்தைக் கொடுத்து, அதிலிருந்து வெளியாகும் குணத்தைக் கண்டறியச்செய்தல், கதையை வேறுவிதமாக முடிக்கச்செய்தல் முதலியன சிந்தனையைத் துலக்கி கற்பனையை எட்டச்செய்யும்.

கேட்ட கேள்விக்குப் பிள்ளைகள் பதில் தரவில்லையானல் அடுத்து அடுத்து மற்றவர்களைக் கேட்பதைவிட நாம் கேட்ட கேள்வியையே மாற்றி மாற்றி நோக்கம் தெளிவுபடச் செய்யவேண்டும். சில கேள்விகளுக்கு எங்கிருந்து ஆரம்பிக்கவேண்டும் என்று தெரியாமல் விழிப்பதுண்டு. சில கேள்விகளின் பதில் அரைகுறையாக வரும். அப்பொழுது

அதை ஏற்று, வேறுவகையாக கேள்வியிட்டு இன்னும் பொருத்தமான திருப்தியான பதிலை வரவழைக்கவேண்டும். நான்கு பையன்கள் எழுந்து பதில் சொல்லாமல் விழித்தால் மற்ற பையன்களும் விழித்த பையன்களுடன் சேர எண்ணுவார்களேயொழிய பதிலை யோசிக்க முற்படமாட்டார்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது.

பின்வரும் பாராவை எடுத்துக்கொண்டு விஷயக்கேள்விகள் எவை சிந்தனை தூண்டும் கேள்வியெவை என பார்ப்போம்.

நடுநிலைமை குன்றாமை (பாடம்)

முகமதுகானுக்கு ஆமெட் என்னும் பெயருள்ள ஒரு குமாரன் இருந்தான். ஆமெட் சிறுவயதுமுதல் நற்குணமுடையவனாக விளங்கினான். அவன் பொய்சொல்லான். பிறர்பொருளை விரும்பான். நீதிநெறியினின்றும் தவறான். அவன் எல்லா விஷயங்களிலும் நேர்மையாக நடந்துவந்தான். அனைவரும் அவனை நீதிமான் என்று புகழ்ந்து கொண்டாடினார்கள்.

விஷயக்கேள்விகள் :—

1. ஆமடின் தந்தை யார்?
2. அவனிடமுள்ள நற்குணங்கள் எவை?
3. 'குமாரன்' பெண்பால் கூறு.
4. ஜனங்கள் ஏன் அவனை புகழ்ந்தார்கள்?

சிந்தனை தூண்டும் கேள்விகள் :—

1. நேர்மை என்றால் எந்தெந்த குணங்கள் அமையவேண்டும்? எது மிக முக்கியம்?
2. பாராவுக்கு தலைப்பிடு.
3. மூன்று குணங்களில் எது மிகவும் முக்கியமானது.
4. "பொய் சொல்லான்" வேறு ஒரு சொல்லால் கூறு
5. பாடத்தலைப்புக்கு இப்பாரா அவசியமா?

கற்றலின் இயல்பும், வளரும் விதமும்

(G. V. Natarajan H. M. Kolappalur)

இவ்வுலகில் இறைவனால் படைக்கப்பட்ட எல்லா உயிர்வகைகளிலும், மானிடவர்க்கமே சிறந்தமுறையில் செவ்வனே கற்கக்கூடும். கற்கப்படும் பொருள்களை எளிதிலும், நுட்பமாகவும் மனிதனே கற்றுக்கொள்கிறான். அதற்குக் காரணம்யாதெனில் அம்மனிதனுக்கு கற்பதற்குச் சிறந்த கருவியான நல்ல மூளையும், அதைச்சேர்ந்த நரம்புத்தொகுதியும் கற்றற்கு ஏற்ற பிறவிக்குணங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இயற்கையில் அமைந்துள்ள அறிவை செயற்கையாகிய கல்வியினால் பலவிதங்களில் சீர்திருத்திக்கொண்டு, முன்னேற்றத்திற்கு வேண்டிய ஒழுங்குவகைகளைத் தேடிக்கொள்ளும் ஆற்றல் உள்ளவனாய் மனிதன் இருக்கிறான்.

கல்விஎன்பது நம்முள் புதிதாக இல்லாத ஒரு வஸ்துவைப் புகுத்துவது அன்று. இயல்பாக நம்முள்உள்ள இயல்பூக்கங்களும் (Instinct) அவற்ருல் விளையும் துலக்கள்களையும் (Response) கல்வியினுல் புதிதாக நம்வாழ்க்கையில் வந்துசேருகின்ற விஷயங்களோடும், சந்தர்ப்பங்களோடும் பொருத்திக்கொள்ளப்படுவதே கற்றல் ஆகும். எனவே பிறவிக்குணங்களும், இயல்பூக்கங்களுமே கற்றலுக்கு அடிப்படை எனலாம். சுருங்கக்கூறின் கற்றல் இயற்கைத் துனைக் கருவிகளைக்கொண்டு கட்டுப்படுகிற ஒரு மேல் கட்டிடமே ஆகும். இசை, பேசுதல் முதலியவைகள் பிறவி ஊக்கங்களிலிருந்து கற்கப்பட்ட துலங்களேயாகும். காற்றுப்பைகளில் உள்ள காற்றினுல் காற்று நாண்கள் (Vocal cards) அசைந்து ஏற்படும் குறளே ஓசை ஆகிறது. இப்பிறவித் துலங்கள் பல மாறுதல்கள் அடைந்து இசையாக மாறுகிறது.

கற்றலில் நாம் பக்குவமடைதல் (Maturity) இயக்கம் (activity) என்ற இரண்டு பகுதிகளைக்காண்கிருேம். மாணவனின் பேசும் உறுப்புக்கள் பக்குவமடையாவிட்டால் பேசுதலில் நாம் அவனை இயக்க முடியாது; பக்குவம் அடைந்துவிட்டால் இயக்கத்தை நாம் பழக்கத்தினுலும், திரும்பத்திரும்ப செய்வதாலும் கற்பிக்கலாம். பக்குவம் அடைதலே பயிற்றல் தொடங்கும் இடம் ஆகும்.

கற்பிக்கப்படும் மாணவனை நாம் கல்வியில் இயக்கும்போது அவனுக்கு அதில் விரும்பத்தக்க நோக்கம் இருக்கவேண்டும் (Strong motive or purpose). ஒரு சிறந்த நோக்கம் கற்றலுக்கு அடிப்படையாக இருக்கவேண்டும். அதுவும் தெளிவானதாய் இருக்கவேண்டும். அதில் வெற்றியோ, தோல்வியோ அடைந்தால் அதுவும் கற்றலைத்தூண்டும் கருவியாக அமையும்.

தட்டுத்தடுமாறி தகுந்ததை அறிதல் Learning (through trial and error) முறையே கற்றலின் இயல்பான முறை என்பர். இவ்வழியிலேயே குழந்தைகளும் விலங்குகளும் கற்கின்றனர் என்பர். நாகரீக வளர்ச்சியிலும் இம்முறை வேலைசெய்கிறது. (laboratory Method) என்று சொல்லப்படும் ஆய்ந்து அறியும் முறை இம்முறையேயாகும். ஆனுல் இது மெதுவாகச் செல்லுகிறது. காலச் செலவும் அதிகமாகிறது.

உற்றுநோக்கியும்; பிறர்செய்வதைப்பார்த்து (learning by observation and imitation) பின்பற்றியும் கற்கும் நிலையும் கல்வியில் உண்டு. .மாணவன் தானுகச்செய்து கற்கினும் உற்று நோக்காது கற்ருல் பயனில்லை. அக்கல்வியின்பயனை வேறு புதுசந்தர்ப்பங்களோடு பொறுத்தவும் முடியாது. பிறரைப்பார்த்துச் செய்தல் குழந்தைகளிடத்தில் முதலில் இயல்பாய் பயன் கருதியில்லாமல் அமைந்திருப்பினும் பின்னுல் வேண்டுமென்றே பயன்கருதி அவர்கள் பிறரைப்பார்த்துச் செய்வதில் முனைந்துநிற்கிருர்கள். கல்வியில் இது

மிகவும் முக்கியமான அம்சமாகும். இவற்றைவிட முக்கியமானதும், சிறந்ததுமான இயல்பு (learning by thinking or reasoning) சிந்திக்கும் அல்லது அனுமானிக்கும் ஆற்றலினால் கற்பதாகும். இது உற்று நோக்கிக் கற்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பொதுவான எண்ணங்களையும் அநுமானம் வேண்டுகிறது. ஆனால் அதோடு நில்லாமல் நாம் மிகவும் கவனத்தோடு வார்த்தைகளின் அல்லது கருத்துக்களின் பொருள்களையும் அவற்றின் தொடர்பையும் ஒன்றுபடுத்திப்பார்த்து அறிந்து கற்றலைச் செய்கிறோம்.

கொல்லிமலையின் இயற்கைச் சாதனங்கள்

(P. Muthuvel, H. M., Pachaperumalpatty)

(கொத்து 35, மலர் 7, பக்கம் 59-ன் தொடர்ச்சி)

மலையின்மேல் அரப்பளி ஈஸ்வரன் கோயில் இருக்கிறது. இக்கோயிலுக்கு ஆடி 18 பண்டிகைக்கு 9 நாள் உற்சவம் விசேஷமாக கொண்டாடப்படும். நிலப்பாக கிராமங்களிலிருந்து உற்சவத்துக்கு ஏராளமான ஜனங்கள் போய் பார்த்துவருகிறார்கள். மார்கழி-ஸ்ரீ திருவாதிரையன்றையதினம் நிலப்பாகத்தின் கிராமத்திலுள்ள பெரிய தனக்காரர்கள் ஷை கோயிலுக்கு மேள வாத்தியங்களுடன் பூஜை கொண்டுபோவது வழக்கம். இக்கோயிலின் பக்கத்திலிருந்துதான் ஆறு உற்பத்தியாகி 1 மைல் உயரத்திலிருந்து கீழே வழிந்து விழுகிறதாம். (காவேரியைப்போல)

மலையில்விளையும் பழவர்க்கங்களை மேல் மலையிலிருந்து கீழே மலையாளிகள் ஆண், பெண்யாவரும் கீழே மலையோரத்திலிருக்கும் புளியஞ்சோலை சந்தை, வைரச்செட்டிபாளையம் சந்தையிலும் விலைக்குக் கொடுத்துவிட்டு நிலப்பாகத்திலுள்ள சிலசாமான்களையும், சுருட்டு புகையிலை, முதலியவைகளும் வாங்கிக்கொண்டு மலைக்குப் போய் விடுகிறார்கள். மலையில், நிலப்பாகத்திலுள்ளவர்கள் நடக்க முடியாவிடில் மலையாளிகள் மனிதரை தொட்டிலில் உட்காரவைத்து, இரண்டு பேர் தூக்கிக்கொண்டு போகிறார்கள். அவர்களுக்குக் கூலிகொடுத்துவிட வேண்டுமாம்.

மலையிலிருந்து ஐய்யாறு உற்பத்தியாகி ஸ்ரீரங்கத்தில் காவேரியில் கலக்கிறது. மலையிலிருந்துவரும் ஆறுனது ஓர் பகுதி புளியஞ்சோலை என்னுமிடத்தில் ஏராளமான நன்செய் நிலங்களுக்கும், ஒருபகுதி சில கிராமங்களில் வரும் தண்ணீரை பெரிய குளங்களில் தேக்கி விவசாயத்துக்குப் பயன்படுகிறது. இதனால் முசிரிதாலுக்காவின் வடகோடியில் 10, 15, கிராமங்களுக்கு காவேரியாற்றின் பாய்ச்சல் நிலத்தைவிட அதிக பயன் தரக்கூடியதாக இருக்கிறது. கொல்லிமலை, சேலம் ஜில்லாவிலிருந்தும் நமது திருச்சி ஜில்லாவுக்குப் பயன் தரக்கூடியதாக

இருக்கிறதே ஒழிய சேலம் ஜில்லாவுக்கு ஒருவித நன்மையும் தரவில்லை. ஆகையால் கொல்லிமலை பலவிதத்திலும் நமக்கு சாதகமாகவே இருக்கிறது என்று சொல்லலாம்.

இம்மலையில் அநேக மரம், செடி, கொடி, காடுகள் அடர்ந்திருப்பதால் இக்காடுகளை அழிக்காவண்ணம், கவர்ன்மெண்டார் பாரஸ்டு ஆபீஸர் அவர்களை ஏற்படுத்தி கண்காணித்து வருகிறார்கள்.

நிலப்பாகத்திலுள்ளவர்கள் மலைக்குச் சென்று தங்கினால் மலேரியா ஜுரம் உண்டாகி அதிக ஆபத்து உண்டாக்கிவிடும். மலைக்குச்சென்று பழகினவர்களுக்கு ஜுரம் வருவதில்லையென்றும் சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் மலைவாசிகளுக்கு ஜுரம் வந்தால் கவர்ன்மெண்டார் கொய்னா மருந்து இனாமாகக் கொடுத்து உதவுகின்றனர்.

21001

சங்கீதம்

[B. Thomas Victor, Music Teacher.]

பாலர்களைப் பள்ளிக்கு அழைத்தல்

29 நோட்மெட்] [ஆதிதாளம்.

கா ப ப ம க கா ப ப ம க	ரீ க ரி க ம	க ரி கா ;
பாலர் களே . பாலர் களே .	பள்ளிவாருங்	கள் .
ஸா ரி ரி ரீ ரீ ரி ரி ஸ ரி	கா ம க ரீ	ஸா ஸா ;
காஸ மதில் கருத்தாய்நாம்	பாடம்படிப்	போம் . .

2. காலையிலே எழுந்திருந்து கண்ணைத்துடைத்து
ஆலயத்தில் ஆண்டவரை போற்றித்துதிப்போம்.
3. சுத்தமுள்ள ஆடைகளை உடுத்திநேராய்
புத்தகத்தை கையிலேந்தி பள்ளிநடப்போம்.
4. பள்ளியில்நாம் பாடங்களை கவனத்துடன்
புள்ளிதவறாமல் கற்று புகழடைவோம்.
5. கல்விதனைக் கற்றிடவே ஆர்வமடைவீர்
நல்மகிமை பூவினிலே நாளும்சேருமே.

WANTED a Secondary Grade Trained Lady Teacher for St. Mary's Higher Elementary Girls' School, Manaparai from 1st April 1945. Salary Rs. 25+8. Apply to the Manager.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.

54

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

7-APR 1945

Editor & Publisher → Rev. Fr. A. Lourduswami, B.A., L.T.
R.C. Secondary Training School, Trichinopoly.

கோத்து 35 | 15 மார்ச்சு 1945 | மலர் 9

190000

R. C. போதனாமுறை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. | தனிப்பிரதி அணா 2.

போதனு விஷயப் பூங்கொத்து

கொத்து 35] 15 மார்ச்சு 1945 [மலர் 9

பத்திராதிபர் குறிப்புகள்

நம் பாடசாலை பழைய மாணவர் சங்க வருடாந்தர விழா.—இவ் விழா 28-2-45 புதன்கிழமை மாலை, திருச்சி, அர்ச். சூசையப்பர் கலாசாலை பேராசிரியர் திரு. ஏ. இருதயசாமி ரெட்டியார், M.A., B.L., L.T. அவர்களது தலைமையின்கீழ் நமது சபாமண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இப்பாடசாலைத் தலைமை ஆசிரியர் சங். A. லூர்துஸ்வாமி, B.A., L.T. அவர்கள், அனைவர்க்கும் நல்வரவு கூறினவுடன் சிற்றுண்டி வழங்கப்பட்டது. அவ்வமயம் ஷ பாடசாலை பழைய, புது மாணவர்கள் இத்தாய்ப்பாடசாலையின்பேரில் தங்களுக்குள்ள அன்பையும் அபிமானத்தையும் வெளிப்படுத்தப் பற்பல புகழுரைகள் கூறினர். பின்னர் நடைபெற்ற சங்கீதப் போட்டியில் நம் பழைய மாணவர் G. பட்டாபிராமன் வெகு திறமையுடன் விளங்கியதைத் தேர்ந்து, அன்னவருக்கு வெள்ளிப்பதக்கப் பரிசு அளிக்கப்பட்டது. சங்கக் காரியதரிசியவர்களால் வருடாந்திர ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது.

இறுதியில் தலைவர் தமது அரிய சொற்பொழிவில் இப்பாடசாலை நம் தமிழ்நாட்டு ஆசிரியர்கட்குப் புரிந்துவரும் தொண்டினைப் புகழ்ந்து, இங்கிருந்து வெளியாகும் "போதனுவிஷயப் பூங்கொத்து" ஆரம்ப ஆசிரியரனைவர்க்கும் ஆற்றிவரும் அரிய சேவையைப் பெரிதும் பாராட்டி, இப்பத்திரிகையை எல்லா ஆசிரியர்களும் படித்துப் பயன் எய்துவதே முறை என வற்புறுத்தினர். வந்தனோபசாரங்களுடன் விழா இனிது கொண்டாடப்பட்டு நிறைவுற்றது.

* * *

New Admissions.—வழக்கம்போல் அடுத்த ஜூலை மாதம் நம் பாடசாலை ஸெக்கண்டரி கிரேடு, எலிமெண்டரி கிரேடு வகுப்புகளில் புது மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். சேர விரும்புகிறவர்கள் பின்வரும் ஒழுங்குகளைக் கவனிக்கக்கடவர் :—

1. இப்பாடசாலை Application Form வாங்கி, அதில் பூர்த்தி செய்து, அதை அடுத்த மே-மீ 31-ம் தேதிக்குள் இப்பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு அனுப்பவேண்டும். பாரம் (Form) ஒன்றுக்கு 2 அணு வீதம் தபால் ஸ்டாம்பு அனுப்பி, தேவையான பாரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2. ஷ விஷயமாய் அடுத்த ஜூலை மாதம் 2-ம் தேதி திங்கட் கிழமை காலை 9 மணிக்கு அபேக்ஷகர்கள் இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரின்முன் ஆஜராகவேண்டும். ஆஜரானவர்கள் ப்ரவேச பரீட்சை எழுத, ப்ரவேசக் கட்டணம் ரூ. 2 செலுத்திப் பரீட்சை

190000

எழுதவேண்டும். அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

[குறிப்பு] ஷெ பரீட்சைக் கட்டணம் ரூ. 2-ல் பரீட்சைநாளன்று சாப்பாடு, இடவசதி, வினாவிடைப் பத்திரங்கள் முதலியவற்றிற் கேற்படும் சகல செலவுகளும் அடங்கும்.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொருவரும் சேர்க்கைத்தினத் தன்று ரூ. 10 "டிபாசிட்" (Deposit) பணம் கட்டவேண்டும்.

4. ஷெ "டிபாசிட்" கட்டுவதுடன் இப்பாடசாலை "போர்டிங் கில்" (Boarding) சேர்ந்து படிக்க, போர்டிங் அட்வான்ஸ் ரூ. 20 கட்டிச் சேரவேண்டியது அவசியமாகும்.

[குறிப்பு] ஸெக்கண்டரி கிரேடு மாணவர்கட்டு மாத "ஸ்டை பெண்டு" (Stipend) ரூ. 12-ம், எலிமெண்டரி கிரேடு மாணவர்கட்கு ரூ. 8-ம் அரசாங்கத்தார் வழங்குவர்.

* * *

வெள்ளிப்பதக்கப் பரிசு.—இந்த வருஷ T. S. L. C. பரீட்சையில் தேறி முதன்மையான மார்க்கு வாங்கும் ஸெக்கண்டரி கிரேடு முதன்மை மாணவர் ஒருவருக்கும், அவ்வாறே எலிமெண்டரி கிரேடு முதன்மை மாணவர் ஒருவருக்கும் வழக்கம்போல் இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரால் தலைக்கொரு வெள்ளிப்பதக்கம் பரிசளிக்கப் படும்.

சென்னை கல்வி இலாகா

Amendment to rules for recognition and aid.
(G. O. M. S. No. 291; Education, 2nd March 1945.)

திருத்தவிதி :—ஒரு உயர்தர ஆரம்பப் பாடசாலையில் வேலைசெய் யும் தலைமை ஆசிரியரும், VI, VII, VIII வகுப்பு ஆசிரியர்களும் சாதாரணமாக, ஸெக்கண்டரி கிரேடு பயின்ற ஆசிரியராகவே இருக்க வேண்டும் என்பது பொது விதி. ஆனால் ஷெ உத்தரவின்படி, ஒரு முழு உயர்தர ஆரம்பப் பாடசாலையில் நான்கு அல்லது அதற்கு மேற் பட்ட ஸெக்கண்டரி கிரேடு பயின்ற ஆசிரியர்கள் (IV, V வகுப்புக ளில் ஆங்கிலம் போதிக்க லாயக்குள்ள ஆசிரியர்கள் உள்பட) வேலை செய்துவந்தால், "பண்டிட்" யோக்கியதாம்சம்பெற்ற ஒரு ஆசிரி யரை ஷெ ஸெக்கண்டரி கிரேடு ஆசிரியர்கள் யாராவது ஒருவருக்குப் பதிலாக (மானேஜர் இஷ்டப்பட்டால்) நியமிக்கலாம்.

ஆனால் இந்த "பண்டிட்" VI, VII, VIII வகுப்புகளுக்குரிய பாஷை (தமிழ்) பாடங்களைப் போதிப்பதோடு (தேவையானால்) கீழ் வகுப்புகளிலும் பாஷைப்பாடங்களைச் சேர்த்துக் கற்பிக்கவேண்டும். இந்த மாறுதல்பற்றி கீழ்வகுப்பு யாதாம் ஒரு ஸெக்கண்டரி கிரேடு ஆசி ரியர் மேல் வகுப்புகளில் பாடங்கள் போதிக்க அனுமதிக்கப்படலாம்.

MHP
M45 55.9

கற்றலின் இயல்பும் வளரும் விதமும்

(G. V. Natarajan, H. M., Kolappalur)

(கொத்து 35, மலர் 8, பக்கம் 67-ன் தொடர்ச்சி.)

கற்றலைப்பற்றி சில விதிகள் (Laws of learning) விரைவாகவும், பயன் உடையதாயும் கற்றலுக்கு ஏற்ற அல்லது துணை செய்யக்கூடிய சில சந்தர்ப்பங்களை விளக்குவனவாய் இருக்கின்றன. அவற்றில் முதலாவதாகக்கருதுவது காரியசித்திவிதியைக்கூறலாம் (The law of effect or selection by experience result) உலகத்தில் தோன்றிய மக்களும், மாக்களும் தங்களுக்கு விருப்பம்தரக்கூடிய காரியங்களையே சித்தியுடன் எப்பொழுதும் செய்து சந்தோஷப்படுகிறார்கள். எந்தக்காரியம் மனதிற்குச் சஞ்சலம் கொடுக்கிறதோ, அதை மானிட சமூகம் பொதுவில் வெறுத்துத்தள்ளி, மீண்டும் அதைச் செய்யத் தூண்டப்படுவதில்லை. உதாரணமாகப் பள்ளிக்கூடங்களில் பொதுவில் பரிசு கொடுத்து ஆசைகாட்டுவதையும், தண்டனை அடைவதையும், பலவிதக் கட்டாய முறைகளையும், பலதட்டவை திருத்தி எழுதுதல் முதலியவற்றையும் தகுதி அறிந்தே மேற்கொள்ள வேண்டும். ஆதலினாலே உணர்ச்சி கற்றலில் மிகவும் பங்கெடுத்துக்கொள்ளுகிறது. கல்வி முறையிலும், வகுப்புகளிலும் வெறுப்பைத்தரத்தக்கவை காரியசித்திவிதியைக் கெடுக்கலாம். ஆதலால் அவற்றை நீக்குவதுடன் மேற்கொள்ளவும் கூடாது.

அப்பியாசவிதி (The law of use or exercise) எதை அப்பியாசம் செய்துகொண்டு வருகிறோமோ அதைக் கற்றுக்கொள்கிறோம். எதைப் பயிற்சிசெய்யாமல் விடுகிறோமோ அதைக் கற்பதில்லை. ஒருவன் பாடுபட்டு எதைக் கற்கவேண்டுமென்று பழகுகிறானோ அது அவன் மனதில் நன்றாய்ப் பதியும். இவ்விதமாகப் பயிற்சி செய்வதிலும் வெறும் பழக்கம்மட்டும் போதாது. அப்பழக்கம் செய்துகொள்கிற விஷயத்தில் விருப்பமும் வேண்டும். காரியசித்திவிதி அப்பியாசவிதிக்கு நம்மைக் கொண்டுவந்துவிடுகிறது. பள்ளிக்கூடத்தில் பெருக்கல் வாய்ப்பாட்டை மாணவர்களைக்கொண்டு பழகும்படி செய்யும்போது அவர்கள் அதில் உள்ளபடியே குருட்டுப்பாடம் ஒப்புவிக்கும்படி விடக்கூடாது. அது என்ன என்று உணர்ந்து அதை விருப்பத்தோடு பழகும்படியான விதத்தைக் கையாளவேண்டும். எவ்வளவுக்கு ஒரு காரியத்தில் விருப்பத்தை மாணவனுக்கு உண்டுபண்ணுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அவன் அதைச் செய்ய முன்வருவான். இதுவே இவ்விதியின் அடிப்படையான அம்சமாகும். வகுப்புகளில் திரும்பத் திரும்பக் கூறுதலும் பயிற்சிசெய்தலும் முதலியவை எல்லாம் இவ்விதி பெற்றுத் தோன்றியனவே.

ஆய்த்தவிதி (The law of readiness) ஒரு காரியத்தை நாம் செய்ய ஆயத்தமாய் இருக்கும்போது, அதைச் செய்யும்பொழுது

ஓர்வித மகிழ்ச்சியும், அதைச் செய்யாமல் இருக்கும்போது மனச்சஞ்சலத்தையும் நாம் அடைகிறோம். இதனை எதிர்மறையில் பார்க்கும்போது, ஒரு காரியத்தைச் செய்ய தயாராய்இல்லாமல்இருக்கும்போது அதைச் செய்யும்படி கட்டாயப்படுத்துதல் வெறுப்பையும், மனத்துயரத்தையும் தரும். இவ்விதியை ஆசிரியர்கள் நன்றாய்க் கவனித்துக் கற்பிப்பதில் மேற்கொள்ளவேண்டும். பிள்ளைகள் கேள்விகள் கேட்கும்போது அவற்றிக்குத் தகுதியான விடைகளை ஆசிரியர்கள் வெறுப்பின்றியும், முகம்கோணாமலும், சரிவரப் பதில் அளிக்கவேண்டும். மாணவர்கள் சிலவற்றைக் கற்பது இன்றியமையாதது என்று ஆசிரியர்களோ, பாடத்திட்டமோ கூறினால் உடனே அதை மாணவர்கள்மீது சுமத்தாமல், மாணவரும் அதன் அவசியத்தை உணரும்படி ஆயத்தப்படுத்தவேண்டும். மாணவர்களின் ஆய்த்தம் உள்ள மனதே கற்பதற்கு அனுகூலமாயுள்ள முதற்படியாம். எவ்விதமாய் அவர்களது ஆவலைத் தூண்டவேண்டுமென்று அறிந்தே ஆசிரியர்கள் கற்பிக்கவேண்டும்.

பழக்கத்தடைவிதி (The law of inhibition by habit) சில தூண்டுதல்களினால் உண்டாகக்கூடிய துலங்கல்கள் முதல் முதலில் எதனால் தூண்டப்பட்டனவோ, அதனோடு தொடர்புடையனவாய் அமைகின்றன. முதல் முதல் தூண்டப்பட்ட அப்பொருள் மாணவர்களின் மனதில் பதிந்திருக்கலாம். அப்பொருள் மாணவர்களின் விருப்பத்திற்கோ அல்லது வெறுப்புக்கோ காரணமாய்ப் பொருந்தியிருந்தால், கற்பதில் அது அதற்கேற்றபடி விருப்பையோ, வெறுப்பையோ உண்டாக்கலாம். ஆதலினாலே இவ்விரண்டும் நில்லாத ஒரு நடுநிலையான எண்ணம் இருக்கும்படி ஆசிரியர்கள் பார்த்துக்கொள்ளவேண்டும். முதல்முதல் கற்றலிலும், கற்றலைப்பற்றியும் படிகின்ற எண்ணங்கள் நேர்மையானவையாகவும், உண்மை உள்ளவனாகவும் இருக்கவேண்டும். தவறான எண்ணங்கள் படிந்துவிட்டால், அவற்றைப் பின்னால் மாற்றுவது கடினமாய் இருக்கும்.

சில இயல்பூக்கங்கள் ஒரு குறித்தவயதில் மலர்ச்சி அடைந்து பின் மறைந்து விடலாம். குழந்தையின் வளர்ச்சியில் தனிப்பட்ட விருப்பங்கள் குழந்தைதோறும் மாறலாம். எச்சமயத்தில் குழந்தைகளுக்கு விருப்பம் ஏற்படுகின்றதோ அதை ஆசிரியர் கண்டறிந்து ஏற்ற சமயத்தில் ப்யன்படுத்திக்கொள்ளாவிட்டால், பிறகு கற்றலில் அவைகளை மீண்டும் நாம் திரும்பிக் கொண்டுவரமுடியாது. ஆதலால் கற்றலில் குழந்தைக்கு ஒவ்வொரு பாடத்திலும் கவர்ச்சி ஏற்படுகிற சமயம் பார்த்து அது நீங்குவதற்கு முன்னமேயே நாம் ப்யன்படுத்திக் கொள்ளவேண்டும்.

நிறுத்துக் குறிகள்

(P. G. S. Aiyar, B.A., L.T.)

ஒரு பாஷையை எழுதுபவர்கள் முக்கியமாகப் பின்பற்றவேண்டிய நிபந்தனை, நிறுத்துக்குறியீடுகளைத் தக்கவிடங்களில் இடுவதாகும். எழுதப்பட்ட அல்லது, அச்சடிக்கப்பட்ட விஷயத்தின் கருத்தைச் சந்தேகமற அறிந்துகொள்வதற்கு இக்குறிகள் மிகவும் அவசியமாகின்றன. ஒரு வாக்கியத்தில் எவ்விதம் பல கருத்துக்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவாக்குபவை இக்குறியீடுகளேயாகும். மேலும் ஒரு மாணவன் ஒரு வசன பாகத்தை நன்கு கருத்து விளங்க வாசிப்பதற்கும் இவைகள் உதவிபுரிகின்றன.

தற்காலத்தில் தமிழ் போதனையின் நோக்கம் கல்விகற்ற மாணவன் தன் அநுபவங்களையும், தன், உணர்ச்சிகளையும் பிறருக்கு எழுத்து மூலமாகவும், பேச்சுமூலமாகவும் தெளிவாக வெளியிடுதலேயாகும். (Expression) இதற்காகவே வாய்மொழி அப்பியாசங்களும், எழுத்து அப்பியாசங்களும் அதிகமாக வற்புறுத்தப்படுகின்றன. அவ்வித எழுத்து அப்பியாசங்களை நாம் கையாளும்போது இந்த நிறுத்துக்குறிகளின்மீது நமது கவனம் செலுத்தப்படவேண்டும். இதனை உத்தேசித்தே சர்க்கார் பாடத்திட்டத்திலும் இவ்வம்சத்தைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

ஆனால் சாதாரணமாக இவ்வம்சத்தை ஆசிரியர்கள் அதிகமாகக் கருத்தில் கொள்வதில்லை; அக்குறையை நிவர்த்திப்பதற்காகவே சில உபாயங்கள் இங்கு குறிக்கப்பட்டுள்ளன. சர்க்கார் பாடத்திட்டத்தின்படி மூன்ருவது வகுப்பிலேயே முற்றுப்புள்ளியின் உபயோகத்தைச் சிறுவர் உணர்ந்துகொள்ளவேண்டும். இதற்குப்பின்வரும் அப்பியாசத்தைக் கையாளலாம்.

இராமன் கடைக்குப்போய் இரண்டு தேங்காய் வாங்கினன் கடைக்காரனிடம் சில்லரையில்லை மறுநாள் தருவதாகச் சொன்னன் அதனை ஒப்புக்கொர்ண்டு வீடு திரும்பினன்.

இவ்விதம் நிறுத்துக்குறியீடுகள் இல்லாத ஒரு பகுதியைக் கொடுத்து முற்றுப்புள்ளியிடச் சொல்லலாம்.

முற்றுப்புள்ளியுடன் காற்புள்ளி, மேற்கோள் குறிகளையும் அறிந்துகொள்ளவேண்டும் என நான்காவது வகுப்பு பாடத்திட்டம் கூறுகின்றது. இந்த வகுப்பில் இருவித அப்பியாசங்களைக் கையாளலாம். அவை பின்வருமாறு :—

| நான் உழைத்தேன் | பிழைத்தேன் | வாழ்ந்தேன் | | என அலறிக்கொண்டு அவன் தெருவழியே ஓடினன் | .

கோடுகள் இட்டுள்ளவிடங்களில் தக்க குறிகள் இடவேண்டும். இவ்வப்பியாசத்தில் எங்கு குறிகளையிடவேண்டும் என்பதை நாம் காட்டிவிடுகின்ருேம். இதற்கு அடுத்த அப்பியாசத்தில் ஒரு வசனப் பகுதியை குறிகளில்லாமல் எழுதி குறிகளிடச்சொல்லவேண்டும். அப்பொழுது மாணவர் வாசகத்தை வாசித்து எவ்விடங்களில் குறியிட

வேண்டும் என்பதை முதலில் கண்டுபிடிக்கவேண்டும். பிறகு எத்தகைய குறிகள் என்பதைத் தீர்மானித்து இடவேண்டும்.

இங்கு குறித்துள்ள, உபாயங்களைப்போன்ற பலவற்றைப் பாடத் திட்டத்தை நன்கு ஆராயின் பலவித அப்பியாசங்களைத் தயாரிப்பது எளிதாகும்.

Wanted a Catholic Secondary Grade Teacher to act as Second Assistant in St. Sebastian's R. C. Higher Ely. School, Vembar, (Via) Vilatikulam, Tinnevelly Dt. Salary Rs. 27+8 per mensem. Apply to the Manager.

சங்கீதம்

[B. Thomas Victor, Music Teacher.]

தந்திரமுள்ள முயல்

29, சங்கராபரணம் } ஆ-ஸரிகமபதநிஸ்
ரூபகதாளம் } அ-ஸ்நிதபமகரிஸ

1.	ஸ ரி ஸா ஸ நி	ஸ் ரி கா க ரி
	சிங் க மோர்	பெருங் கா ட்டின்
	ப ம க க ரீ	ஸ நி ஸா ;
	அதி பதி யாய்	விளங் கி .
	ப ப பா த ப	ம க மா ப ம
	அங் கு வாழும்	மிரு கங் களை
	க ரி கா ம ப	ம க ரீ ;
	ஒவ் வொன் ருய்	தின மும் .

2. தன்னெதிரில் வரும்படியாய்
கட்டளை யொன்றனுப்பி
தினந்தோறும் அம்மிருகத்தையே
தின்று பசியார

3. முறைவந்ததே முயலொன்று
சிங்கத்திடம் போக
தருணம் முயல் செல்லாமலே
தாமதித்து போக

4. தாமதமேன் என்றுசிங்கம்
கோபத்துடன் கேட்க
உம்மைபோலோர் சிங்கத்திற்காய்
ஒளிந்தேன் என உரைக்க

190,000.

Reg. No. M. 1534

5. அச்சிங்கத்தை காட்டசிறு
முயலே சிங்கம்கேட்க
நிச்சயமாய் காட்டுகிறேன்
வாரும் என உரைத்தே
6. கூட்டிச்சென்று பாழ்கிணற்றை
காட்ட சிங்கம்பார்க்க
மேட்டிமையாய் தன்னிழலே
கண்டமடசிங்கம்
7. மற்றோர் சிங்கமென்று
எண்ணிபர பரப்பாய்
சற்றேனும் நினையாமலே
கிணற்றில் குதித்திறக்க
8. குதித்தோடி முயல்மிகவும்
சந்தோஷமாய்ச் செல்ல
விதியைவெல்ல மதியேபெரும்
காரணமென அறிவீர்.

சில ஆபரணங்களின் வகை

(A. Arulanandam, Vannampatti)

தங்கவளை கொலுசுகள் கங்கணங்கள் காப்பு
தாயித்து பதக்கமுடன் தங்க ஒட்டியாணம்
சிங்காரச் சடைப்பில்லை ராக்குடி தாழம்பூ
ஜிமிக்கியொடு தோடுகள் சிறுமணிகள் மாலை
பங்காரு சடைக்குச்சு சடைநாகம் கொட்டை
பாதசரம் பாடகம் பதக்கமொடு மெட்டு.

* * *

அங்கமான முத்து சந்திர ஹாரங்கள்
அழகான சரப்பளி சரிகடகம் பாட்டில்
பாசிபந்து பதக்கமுடன் பங்கிவளை தோடா
பாங்கான தலைக்காப்பு வைரமணி கொப்பு
காசுமாலை கண்டசர கனகவச்சிர மாலை
கர்ணப்பூ குருத்துப்பூ ராதிலிடு முருகு.

(தொடரும்.)

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.